THE NEW
SUNDAY
EXPRESS

# Dedicated counter for UT patients in JIPMER

PUDUCHERRY: JIPMER has established a dedicated counter for patients from Puducherry at its Medical Records Department. According to a release, this special facility enables residents of Puducherry to avail medical case sheets with greater ease. The service is available at the Screening Outpatient Department (OPD), where Counter Numbers 2 and 3 have been exclusively designated for this purpose. Patients have been advised to carry their Aadhaar card to access this facility. Upon presenting the identification, they can quickly obtain their medical case sheets required for further consultations at the hospital. JIPMER officials stated that the initiative is part of ongoing efforts to streamline healthcare access for local residents and reduce waiting times at the OPD. *ENS*

Daily Thanthi Puducherry 25–5–2025

## ஆதார் அட்டையை சமர்ப்பித்து

# உள்ளூர் நோயாளிகள் எளிதாக மருத்துவ ஆலோசனை பெறலாம்

## ஜிப்மர் ஏற்பாடு

புதுச்சேரி, மே.25-

ஜிப்மர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவையை சேர்ந்த நோயாளிகளுக்காக ஜிப்மர் தனது மருத்துவ பதிவுத்துறையில் தனி கவுண்டரை நிறுவியுள்ளது. இந்த தனித்துவ மான சேவை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. புதுவை மாநிலத்திலிருந்து வரும் நோயாளிகள் இந்த சேவையை பெற தங்கள் ஆதார் அட்டையை கொண்டுவருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த வசதி 2, 3 எண்கள் கொண்ட கவுண்டரில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஆதார் அட்டையை சமர்ப்பித்து புதுவை மாநிலத்தை சேர்ந்த நோயாளிகள் எளிதாக மருத்துவ ஆலோசனைக்கான பதி வேட்டை பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமணி

# ஜிப்மரில் புதுவை நோயாளிகளுக்கு தனி மருத்துவ ஆலோசனைப் பிரிவு

**புதுச்சேரி, மே 24:** ஜிப்மரில் புதுவை மாநில நோயாளிகளின் மருத்துவ ஆலோசனைக்கான பதிவேடு பெற தனிப் பிரிவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இயக்குநர் வீர் சிங் நேகி தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுவையைச் சேர்ந்த நோயாளிகளுக்காக, ஜிப்மரில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சேவை கடந்த 2024-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் செயல்பட்டு வருகிறது.

புதுவை மாநிலத்தில் இருந்து வரும் நோயாளிகள் இந்தச் சேவையைப் பெற, தங்கள் ஆதார் அட்டையை கொண்டு வரவேண்டும்.

புதுவை நோயாளிகளுக்கான தனி வசதி ஸ்கிரீனிங் ஓபிடி-யில் 2, 3 எண்கள் கொண்ட பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, சிகிச்சைக்கு ஜிப்மருக்கு வருவோர் தங்களது ஆதார் அட்டையை சமர்ப்பித்து மருத்துவ ஆலோசனைக்கான பதிவேட்டை பெற்றுக் கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.